செ.வெ.எண்: 236 நாள்: 12.05.2021

**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை ஆய்வு செய்தார்.**

---

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் ஆக்ஸிஜன் சேமிப்பு யூனிட்டினை இன்று (12.05.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

பின்னர் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இன்றையதினம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 667 கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா நோயாளிகளுக்கு நாளை வரை தேவையான ஆக்ஸிஜன் கையிருப்பில் உள்ளது. கொரோன நோயாளிகளுக்கு தேவையான ஆக்ஸிஜன் உடனடியாக வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாளை நிச்சயமாக தேவையான அளவு ஆக்ஸிஜன் கிடைத்து விடும்.

தனியார் மருத்துவமனைகளில் இருந்தும் ஆக்ஸிஜன் பற்றாக்குறையின் காரணமாக கொரோனா நோயாளிகள் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருகின்றனர். அதனால் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும் கோவிட் நோயாளிகளுக்கு தேவையான அளவு ஆக்ஸிஜன் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் இருந்தால் மட்டுமே கொரோனா இரண்டாம் அலையில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

கொரோனா நோய் தொற்று உள்ளவர்களுக்கு 5 நாட்கள் வரை எவ்வித அறிகுறியும் தெரிவதில்லை. அதன் பிறகே அறிகுறிகள் தெரிகிறது. அதற்குள்ளாகவே ஆர்டிபிசிஆர் பரிசோதனை மேற்கொண்டு கொரோனா தொற்று உறுதியானவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வர வேண்டும். தாமதமாக சிகிச்சைக்கு வருபவர்களின் உயிரை பாதுகாப்பது சிரமமாக உள்ளது. எனினும் மருத்துவர்கள் நோயாளிகளை திறம்பட கையாண்டு வருகின்றனர்.

கொரோனாவால் இறப்பவர்கள் எண்ணிக்கை மற்றும் இதர நோய்களால் இறப்பவர்களின் எண்ணிக்கையை தனித்தனியாக பிரித்து காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கோவிட் சிகிச்சை பணிகளில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிய விருப்பமுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தனியார் மருத்துவர்கள் பணிபுரியலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த சில நாட்களாக கோவிட் நோய் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். கோவிட் நோய் தொற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க தமிழக அரசு முழு வீச்சில் செயல்பட்டு வருவதுடன், தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பூவதி, வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார் மற்றும் திரு.கே.கே.செல்லபாண்டியன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**